<u>சுருக்கம்</u>

பாசனம் – நீர்வள ஆதாரத் துறை – 2009–2010ம் ஆண்டிற்கான பகுதி II திட்டம் – ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், கீழ் பவானி திட்டக் காலனியில் உள்ள அலுவலர் குடியிருப்பை தல ஆய்வு பரிசோதனைக் கூடமாக ரூ.7.00 லட்சம் செலவில் மாற்றம் செய்தல் – நிதி நிலைக் குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்டது – நிர்வாக ஒப்புதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணித் (எஸ்.1) துறை

அரசாணை (3டி) எண்.17 நாள் 1.8.2009

ஆடி 16 திருவள்ளுவர் ஆண்டு 2040

<u>படிக்கப்பட்டது:</u>

நீர்வள ஆதாரத் துறை, திட்ட உருவாக்க தலைமைப் பொறியாளர் கடித எண்.எப்/9000/2008 நாள் 20.1. 2009.

---

ஆணை:

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் நீர்வள ஆதாரத் துறை திட்ட உருவாக்க, தலைமைப் பொறியாளர் பின்வருமாறு தெரிவித்துள்ளார் உலக வங்கி தூதுக்குழு, தமிழ்நாடு நீர்வள ஆதாரத் தொகுப்பு திட்டத்தின் கீழ் ஈரோடு (பழனியில்) தரக்கட்டுப்பாடு ஆய்வகம் அமைத்து அதனை பொள்ளாச்சி மண்டலத்தின் ஆய்வகத்துடன் இணைக்க கேட்டுக் கொண்டது. மேலும், இதனை தமிழ்நாடு நீர்வள ஆதாரத் தொகுப்பு திட்ட (TNWRCP) வேலைகள், அதாவது (மார்ச் 2003–க்குள்) சென்னையில் அமைந்துள்ள மண் தன்மை ஆராய்ச்சி கோட்டத்தின் தொழில் நுட்ப அறிவுரையின் படி அமைக்க வலியுறுத்தியுள்ளது. தலைமைப் பொறியாளர், பொள்ளாச்சி மண்டலம், மற்றும் தலைமைப் பொறியாளர், வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதார அமைப்பு அவர்களாலும் ஈரோட்டிலேயே இத்திட்டத்தை மார்ச் 2003–க்குள் செயல்படுத்த அறிவுறுத்தப்பட்டது.

2. மாநில கணக்காயர் அவர்கள் தரக்கட்டுப்பாட்டு உபகரணங்களை சரியான முறையில் பயன்படுத்தாததற்கு ஆட்சேபனை தெரிவித்து உள்ளார். எனவே, இதற்கான கட்டிடம் ஈரோட்டில் இல்லாத காரணத்தால் ஆய்வறை மற்றும் ஆய்வு உபகரணங்களை பொருத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே, காளிங்கராயன் வாய்க்கால் மற்றும் அரக்கன்கோட்டை தடப்பள்ளி கால்வாய்கள் புனரமைக்கும் திட்டங்களை செயல்படுத்தும்

பொழுது இந்த தரக்கட்டுப்பாட்டு உபகரணங்களை பயன்படுத்துவதற்கு ஏதுவாக இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆய்வுக்கூடத்தை 95.18 ச.மீ பரப்பளவில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை 2009–2010 ஆம் ஆண்டில் ரூ.7.00 இலட்சமாகும். இத்திட்டம் பொள்ளாச்சி மண்டல தலைமைப் பொறியாளர் அவர்களால் செயலாக்கப்படும். எனவே, இத்திட்டத்தினை செயல்படுத்த கூடுதல் பணியாளர்கள் தேவைப்படாது.

3. மேற்கண்ட திட்டத்தினை 2009–2010ம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் செயல்படுத்துவதற்கு நிதி நிலைக் குழு (Standing Finance Committee) ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, ஈரோடு மாவட்டம், மற்றும் வட்டம் ஈரோடு, கீழ்பவானி திட்டக் காலனியில் உள்ள அலுவலர் குடியிருப்பை தல ஆய்வு பரிசோதனைக் கூடமாக (தரக் கட்டுப்பாடு ஆய்வகம்) ரூ.7.00 இலட்சம் (ருபாய் ஏழு இலட்சம் மட்டும்) செலவில் மாற்றம் செய்யும் திட்டத்திற்கு 2009–2010–ம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் நிர்வாக ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது. சில்லரைச் செலவினம் சிறு மேற்பார்வை செலவுகள் மற்றும் எதிர்பாரா செலவுகள் ஆகிய அனைத்து இனத்தின் கீழ் ஏற்படும் மொத்த செலவுகள் மொத்த பணி (works) மதிப்பீட்டுத் தொகையில் 2.5% க்கு மேல் மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட பணிக்கான செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:-

“4701 பெரிய நடுத்தர பாசனத்திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு–03 நடுத்தர பாசனம் – வணிகத் தன்மை வாய்ந்தது – 380 பொதுப்பணித்துறை நீர் ஆதார அமைப்பின் கீழ் அலுவலகக் கட்டிடம் கட்டுதல், புதுப்பித்தல் மற்றும் சீரமைத்தல் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்ட பணிகள் II மாநில திட்டம் JH ஈரோடு மாவட்டம் மற்றும் வட்டம், ஈரோடு, கீழ்பாவனி திட்ட காலனியில் உள்ள அலுவலர் குடியிருப்பை தல ஆய்வு பரிசோதனை கூடமாக (தரக் கட்டுப்பாடு ஆய்வகம்) மாற்றம் செய்தல். 16 பெரும் பணிகள் (து.தொ.கு 4701–03–380 JH 1601).

5. மேற்கண்ட திட்டப் பணியினை உடனடியாக மேற்கொண்டு குறித்த காலத்திற்குள் செய்து முடிக்கவும் மற்றும் திட்டப்பணியின் முன்னேற்றம் குறித்த அறிக்கையை ஒவ்வொரு மாதமும் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு நீர்வள ஆதாரத் துறை, பொள்ளாச்சி மண்டலத் தலைமைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.35604 / பொ.ப. II / 2009 நாள் 26.6.2009 –ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு. இராமசுந்தரம்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பொறுநர்
முதன்மைத் தலைமைப் பொறியாளர்,
நீர்வள ஆதாரத் துறை, மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது),
பொதுப்பணித்துறை சேப்பாக்கம், சென்னை–5.
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை,
பொள்ளாச்சி மண்டலம், கோவை.
தலைமைப் பொறியாளர், (திட்ட உருவாக்கம்)
நீர்வள ஆதாரத் துறை, சேப்பாக்கம், சென்னை–5.
மாவட்ட கருவூல அலுவலகம், ஈரோடு.
முதன்மை மாநில கணக்காயர் (ஏ & இ) சென்னை–18
முதன்மை மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை–18.
நகல்
நிதி (பொ.ப. II / வ,செ. (பொது) II ) துறை சென்னை–9
பொதுப்பணித் (சி.பா.1) துறை, சென்னை –9 (5 நகல்கள்)
இ.கோ./உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.